

# எஸ்போஸ்

## அவர்கள் அவனைச் சுட்டுக்கொன்றனர்

கருணாகரன்

# கூயம்

என்னைப் பேச விடுங்கள்
உங்களின் கூக்குரல்களால்
எனது காயங்கள் ஆழமாகக் கிழிக்கப்படுகின்றன.

எனது குரல் உங்களின் பாதச் சுவடுகளின் ஒலியில்
அமுங்கிச் சிதைகிறது
வேண்டாம்.
நான் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்
எப்போதும்.

வானத்திலிருந்து நட்சத்திரங்கள்
சிதறி உடைகின்றன,
நீங்கள் கூச்சலிடுகின்றீர்கள்.
மண்ணிலிருந்து விதைகள் பீறிடுகின்றன
நீங்கள் மீண்டும் மீண்டும் சந்நதம் கொள்கிறீர்கள்
உங்களுக்காக நான் வெட்கித் தலைகுனிகிறேன்
சில கணங்களோடும்
யாருக்காவது அனுமதியளியுங்கள்
அவர்களின் தொண்டைக் குழியிலிருந்து அல்லது
மனசின் ஆழத்திலிருந்து எழும் சில கேள்விகளை
அழுத்திக் கேட்கவும் பேசித் தீர்க்கவும்

எனது உடைந்த குரலில்
நானும் பாட விரும்புகிறேன்
அன்பு நிறைந்த துயரப் பாடல்களை

# அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்

கருணாகரன்

மறுபாதி

"அதிகாரத்தைச் சிலுவையிலறைவதா
அதிகாரத்திற்கெதிரான நமது இருதயங்களைச்
சிலுவையிலறைவதா"

- எஸ்போஸ்-

கருணாகரன்

முதற்பதிப்பு
16.04.2016

வெளியீடு
மறுபாதி
அரசடி வீதி.
கோண்டாவில் வடக்கு.
யாழ்ப்பாணம்.

# எஸ்போஸ்

சந்திரபோஸ் சுதாகர் (1975-2007)

16-04-2007 இரவு "எஸ்போஸ்" எனப்படும் சந்திரபோஸ் சுதாகர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வவுனியாவில் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். எஸ்போஸ் கவிஞராகவும், பத்திரிகையாளராகவும், இலக்கியவாதியாகவும் அறியப்பட்டவர். கவிதைகளுடன், சிறுகதைகளையும், விமர்சனக் கட்டுரைகளை யும் எழுதியுள்ளார். புத்தக வடிவமைப்பிலும் ஈடுபட்டு வந்தார்.

ஈழநாதம், வெளிச்சம், ஈழநாடு, நிலம், காலச்சுவடு, வீரகேசரி, சரிநிகர், மூன்றாவது மனிதன், தமிழ் உலகம், இன்னொரு காலடி, ஆதாரம், தடம் ஆகிய இதழ்களில் சுதாகரின் படைப்புகள் வெளி வந்திருக்கின்றன. வெளிச்சம், ஆதாரம், ஆகிய இதழ்களிலும் ஈழநாதம், ஈழ நாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும் எஸ்போஸ் பணியாற்றியிருக்கிறார்.

"நிலம்" என்ற கவிதைக்கான இதழை ஆசிரியராக இருந்து வெளி யிட்டார். மூன்று இதழ்கள் வெளியிடப்பட்டன. லண்டனிலிருந்து வெளியிடப்பட்ட "தமிழ் உலகம்" என்ற இதழிற்கு ஆசிரியராக இருந்து கொழும்பில் வைத்து அதைத் தயாரித்து வழங்கினார். சந்திரபோஸ் சுதாகர் என்ற தன்னுடைய பெயரிலேயே ஆரம்பத்தில் எழுதி வந்து, பின்னாளில், எஸ்போஸ், போஸ்நிஹாலே, போசு என்ற பெயர்களிலும் எழுதியிருக்கிறார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்திரபோஸ் சுதாகர் பளையில் 1975 இல் பிறந்தார். பிறகு கிளிநொச்சி - அக்கராயன் குளம் மகா வித்தியாலயத்தில் படித்தார். தந்தை பளை முகமாலை யைச் சேர்ந்தவர். தாய் நெடுந்தீவில் பிறந்தவர். தாய் அக்கராயன் பொது மருத்துவ மனையில் தாதியாகப் பணியாற்றியபடியால் அங்கேயே குடும்பத்தினர் குடியேறியிருந்தனர்.

# பதிப்புரை

16.04.2016

சந்திரபோஸ் (சுதாகர்) 90 களின் கவிதைப் போக்கை தீர்மானித்தவர்களில் மிகவும் முக்கியமானவர். அவரது கவிதைகள் கொண்டிருந்த புதியதான சொல்முறையும், மொழி வெளிப்பாடும் அரசியல் பிரக்ஞையும் பிற கவிஞர்களிடம் இருந்து அவரை தனித்துவமாக அடையாளப்படுத்துகின்றன.

அவரது கவிதைகளில் எப்போதும் அதிகாரத்துக்கு எதிரான குரல்கள் கொண்டவையாகவே இருந்தன.

ஒருபோதும்அதிகாரத்தின் முன் மண்டியிடாத எஸ்போஸ் 2007 இல் படுகொலை செய்யப்பட்டார். அவரது மரணம் ஈழத்து கவிதைப்பரப்பில் ஏற்பட்ட நிரப்ப முடியாத வெளியாகவே இருக்கின்றது.

எஸ்போஸின் ஒன்பதாம் ஆண்டு நினைவாக இந் நூலினை வெளியிடுவதன் ஊடாக மறுபாதி எஸ்போஸின் நினைவுகளைப் பதிவு செய்கின்றது.

இந் நூலாக்கத்திற்கு உதவிய நண்பர்கள் அனைவருக்கும் மிக்க நன்றிகள்.

-மறுபாதி

# அவர்கள்
# **அவனைச்**
# சுட்டுக் கொன்றனர்

கருணாகரன்

"அச்சத்தைத் தின்று சாம்பருமின்றி அழித்து விடும் "உயிர் நிழல்" என்று அறிவிக்கும் சில ஸ்ரிக்கர்களுடன் ஒரு முன்னிரவில் எதிர்பாராத விதமாக என்னிடம் வந்திருந்தார் எஸ்போஸ். "உயிர் நிழல்" என்ற பெயரில் புதிய இதழொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறினார்.

அப்போது அவர் " நிலம்" என்ற கவிதைக்கான இதழை வெளியிட்டுக்கொண்டிருந்தார். அவர் திட்டமிட்ட அளவுக்கு அந்த இதழ் வர வில்லை. திட்டமிட்ட மாதிரியில்லாமல், அவ்வப்போது என இருந்தாற்போல "நிலம்" வந்து கொண்டிருந்தது. திட்டமிட்டமாதிரி இதழை ஒழுங்காகக் கொண்டு வரமுடிய வில்லை என்ற குறையும் கவலையும் அவரிட மிருந்தது. அதற்குப்பதிலாக இப்போது உயிர் நிழலை வெளியிட முயன்றார்.

"உயிர் நிழல்" என்று "ஒரு இதழ் ஏற்கனவே பிரான்ஸிலிருந்து வருகிறதே" என்று கேட் டேன்.

"அதனாலென்ன" என்று என்னிடம் திருப்பிக் கேட்டார் எஸ்போஸ்.

"ஏற்கனவே அந்தப்பெயரில் ஒரு இதழ் வந்து கொண்டிருக்கும் போது அதே பெயரில்

இன்னொரு இதழ் சமகாலத்திலேயே வெளிவருவது பலருக்கும் குழப்பத்தை ஏற்படுத்துமல்லவா? தவிர ஏற்கனவே அந்தப்பெயரில் இதழைக் கொண்டுவருகின்றவர்கள் ஏதாவது சொல்லக்கூடுமே!" என்று மறுபடி கேட்டேன்.

சட்டென "பெயரில் என்ன இருக்கிறது?" என்றார்.

பசுவய்யாவின் ஒரு கவிதையில் "பெயரில் என்ன இருக்கிறது" என்று ஒரு அடி வரும். எனக்கு அந்தக் கவிதைதான் அப்போது நினைவில் வந்தது. ஏனோ சிரிப்பும் வந்தது.

வந்தவரின் பெயர் என்னவென்று அவனிடம் கேட்க, பெயரில் என்ன இருக்கிறது என்றபடி அவன் அதைச்சொல்லாமல் போகிறான்.

பத்தாண்டுகளுக்கு முன் இந்தக் கவிதையைப் பற்றி எஸ்போசுடன் பேசியிருக்கிறேன்.

சற்று நேர அமைதிக்குப் பிறகு "ஏன் வேறு பெயரொன்றைத்தெரிவு செய்யலாமே" என்றேன். அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை அவர்.

அன்றிரவு நீண்ட நேரம் புதிய இதழ் பற்றி ஆர்வத்தோடு பேசினார். ஒரு புதிய இதழுக்கான தேவை, அதைக்கொண்டு வருவதற்கான சாதக பாதக அம்சங்கள், ஏற்கனவே வெளிவந்த இதழ்களின் நிலைமை எனப் பலவற்றையும் பேசினோம். மிகச்சீரியஸாகவே வெறித்தனமாக அவர் பேசிக்கொண்டிருந்தார்.

எஸ்போஸின் இயல்பே அப்படித்தான். எப்போதும் எல்லாவற்றையும் மிகச்சீரியஸாகவே எடுக்கும் ஆள் அவர். எழுதுவது, விவாதிப்பது மட்டுமல்ல, சாப்பிடுவது, தூங்குவது, உடைகளை அணிவது என நம் அன்றாடச் செயல்பாடுகள் கூட எஸ்போஸுக்குச் சீரியஸ்தான். கூடவே எல்லாவற்றிலும் ஒரு மெல்லிய பதற்றமும் அவரிடமிருக்கும். அந்தப் பதற்றம் அவரை எல்லாவற்றிலும்

அவசரப்படுத்திக் கொண்டிருக்கும்.

எல்லாவற்றிலும் அவர் கொள்ளும் தீவிரம்தான் இதற்குக்காரணம். அதேவேளை அதேயளவுக்கு அவர் எல்லாவற்றிலும் கடுமையான அலட்சியத்தையுமுடையவர். எதிலும் பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்வதாகவே தோன்றும். அப்படி நடந்து விடுவது முண்டு. "விறுத்தாப்பி" என்று சொல்வார்களே அதுமாதிரி, எதிலும் அலட்சியம். எதிலும் எதிர்நிலை. எதைப்பற்றியும் பொருட் படுத்தாமல், யாரைப்பற்றிய அக்கறையுமில்லாமல், தன்னிச்சையாக இயங்குவதில் அவர் தனக்கான ஒரு வகைமாதிரியை உருவாக்கி யிருந்தார். அல்லது அப்படியிருந்தார். அவ்வாறு உருவாக்கிய அந்த வெளியில்தான் அவர் இயங்கியும் வந்தார். அந்த மாதிரியான இயல்பை அல்லது பழக்கத்தைச் சுதாகர் ஒரு போதும் மாற்றிக் கொள்ள முயற்சித்ததில்லை. அதைப்பற்றியெல்லாம் அவருக்குப் பொருட்டுமில்லை.

எந்தத்திட்டங்களுக்கும் வரையறைகளுக்குள்ளும் ஒழுங்குமுறை களுக்குள்ளும் நிற்கும் இயல்பற்றவர் எஸ்போஸ். இதனால் அவர் தன்னுடைய நெருங்கிய உறவினர்களிடத்திலேயே கடுமையான கண்டனங்களுக்கும் விமரிசனங்களுக்கும் எதிர்ப்புக்கும் புறக் கணிப்புக்கும் ஆளானவர். உச்சமானது, அவருடைய அம்மாவுக்கும் அவருக்குமிடையில் ஓயாத சச்சரவுகள். ஆனால் அவரை யாராலும் நிரந்தரமாகப் புறக்கணிக்க முடியாது. அதுதான் அவருடைய பலம். அதுதான் அவரை பலரிடத்திலும் ஆழமாக நேசிக்க வைத்தது.

எஸ்போஸ் எல்லோருடனும் சண்டையிட்டிருக்கிறார். ஆனால் பகைமை கொண்டதில்லை. பல நாட்கள் எங்களின் வீட்டிலேயே எனக்கும் சுதாகருக்கும் இடையில் பெரும் மோதலே ஏற்பட்டிருக் கிறது. மிகச் சிறிய விசயங்களுக்காகவே பெருஞ்சண்டைகள் நடந்திருக்கின்றன.

இந்த மோதல்களைப் பார்த்த ஆரம்ப நாட்களில், "இலக்கியத் தையும் அரசியலையும் விட்டிட்டு வேற எதைப்பற்றியாவது கதையுங்கள்" என்று வீட்டில் சொன்னார்கள். அந்தளவுக்கு

மோதலின் உக்கிரம் இருந்திருக்கிறது. இது மாதிரியான சந்தர்ப்பங்கள் சுதாகருடன் வேறு நண்பர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எந்த வீட்டிலும் யாருக்கும் அவர்மீது கோபம் வந்ததில்லை. பழகும் எல்லா வீடுகளிலும் உரிமை எடுத்துக்கொண்டு நடந்து கொள்வார். மிகச்சரியாகச் சொன்னால் அவரின்மீது எல்லோருக்கும் ஒரு விதமான அன்பும் இரக்கமும் கருணையும் பரிவும் இருந்தது. அவருடைய தோற்றமும் அலைந்த வாழ்வும் இதற்கெல்லாம் காரணமாக இருக்கலாம். அல்லது வெளிப்படையாக விவாதிக்கும் இயல்பும் பகையைக் கொண்டலையாத தன்மையும் சுதாகரின் மீது எதிர்ப்புணர்வை வளர்க்க முடியாமலிருந்திருக்கலாம். என்றபடியால் எல்லோரும் அவரைத் தங்களின் குடும்பத்தில் உள்ள ஒருவராகவே கருதினார்கள்.

சுதாகருடன் நாங்கள் சீரியஸாகப் பேசிக்கொண்டிருக்கும்போது பேச்சை முறித்துக் கொண்டு, சடுதியாக கிளம்பிப்போய்விடுவார். எங்கே போகிறார் என்று யாருக்கும் தெரியாது. ஏன் அவருக்கே தான் எங்கே போகிறேன் என்று பல சந்தர்ப்பங்களில் தெரிந்ததில்லை. எங்கோ போவதாகப் புறப்படுவார். ஆனால், பிறகு வேறொரு இடத்தில் சென்று சேருவார். இடையில் மனம் மாறப் பயணமும் மாறியிருக்கும்.

இப்படி அதிரடியாகப் போனவர், பிறகு ஒருநாள் எதிர்பாராத தருணத்தில் திடுதிப்பென வந்து முன்னே நிற்பார். அவர் எப்போது வருவார் எப்போது போவார் என்று யாருக்கும் தெரியாது. இதுதான் பிரச்சினை. அவருடைய இந்த மாதிரியான நடவடிக்கைகளினால் அவர் புரிந்து கொள்ளக் கடினமான ஒருவராக இருந்தார். நம்மிடம் வந்து விட்டால் முழு உரிமை எடுத்து, பொக்கற்றில் இருக்கும் பணத்திலிருந்து மேசையில் இருக்கும் புத்தகம், பானையிலிருக்கும் சோறு வரையில் எதிலும் உரிமையோடு கைவைப்பார். இது, தான் கொண்டிருக்கும் உறவின்பாற்பட்ட ஒன்று என்பதே எஸ்போஸின் எண்ணம்.

இப்படியெல்லாமிருக்கும் அடுத்த கணத்தில் அவர் என்ன செய்வார் என்று அவருக்கும் தெரியாது. நமக்கும் தெரியாது. அவருடைய

எழுத்துகளிலும் இந்த இயல்புகளை அவதானிக்கலாம். தீவிரம் - அலட்சியம் என்ற இருநிலைகளுக்கிடையில் சஞ்சரிக்கின்ற அல்லது அலைகின்ற மனதைப் பிரதிபலிக்கின்ற எழுத்து அவருடையது. இந்தத் தன்மையை ஒரு படைப்பியக்கமாக்கி, அதை ஈர்ப்புக்குரியதாக மாற்றிக் கவனிப்பைப் பெற்றவர்.

எஸ்போஸின் வாழ்வும் ஏறக்குறைய அப்படித்தான். சிறு வயதிலே தந்தையை இழந்திருந்தார். தாயுடனான உறவு நீண்டகாலமாக சுமுகமாக இருக்கவில்லை. இதனால், இள வயதிலேயே நிலையற்று அங்குமிங்குமாக அலைந்தார். தாயுடனும் பாட்டியுடனும் வாழ்ந்த காலத்திலேயே அவருள் இந்த எதிர்நிலையம்சம் காணப்பட்டது. பள்ளியிலும் அவர் வேறுபட்ட தன்மையிலேயே ஏனைய மாணவர்களைப் போலில்லாமல், தனித்து, விலகலாக இருந்தார் என்று அவருடைய பள்ளிக்கால நண்பர்கள் நினைவு கூருகிறார்கள். அநேகமாக ஆசிரியர்களுடன் அவர் எப்போதும் பிரச்சினைப் பட்டிருக்கிறார். அதனால் அவரால் தொடர்ந்து பாடசாலைகளில் படிக்க முடியவில்லை. படிப்பிலும் பள்ளியிலும் வீட்டிலும் இருந்த ஒட்டாத்தன்மை, அவரை வேறு திசைநோக்கிச் சிந்திக்க வைத்தது. விளைவு, விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னுடைய 15 ஆவது வயதில் இணைந்தார். என்றாலும் கொந்தளிக்கும் மனதுக்கு அங்கும் இடமிருக்கவில்லை. அந்த இயக்கத்தின் கட்டுப்பாடுகளும் அதிகார நிலையும் எஸ்போஸைச் சடுதியாகவே விலக வைத்தது. இரண்டு ஆண்டுகளில் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி, மீண்டும் பள்ளிக்கு வந்து படிக்கத் தொடங்கினார்.

இதுபற்றியெல்லாம் பின்னாளில் சுதாகர் என்னுடன் கதைத்திருக்கிறார். விவாதித்திருக்கிறார். பள்ளியை எஸ்போஸ் அதிகாரம் திரண்டிருக்கிற மையமாகவே பார்த்தார். "கைத்தடியில்லாமல் ஒரு ஆசிரியரை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? மாணவர்களை சக மனிதர்களாக, தங்களையும் விட கூர்ப்புள்ளவர்களாக கருதுகின்ற ஆசிரியர்கள் எங்காவது இருக்கிறார்களா?" என்றெல்லாம் கேட்பார். "இந்தளவில்தான் எங்களின் மனதில் ஆசிரியரைப்பற்றிய படிமம் ஏற்பட்டிருக்கிறது. இந்தமாதிரியான படிமத்தை ஆசிரியர்கள் நம்மிடம் உருவாக்கியிருக்கிறார்கள். "குழந்தைகளிடம் அதி

காரத்தை திணிக்கும் பெரும் நிறுவனமே பள்ளி" என்பது அவருடைய நிலைப்பாடு.

"பிள்ளைகளுக்கு அடிக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களே!" என்றொரு நண்பர் சுதாகரிடம் கேட்ட போது, சிரித்தார் எஸ்போஸ். இதற்கெல்லாம் சட்டம் கொண்டு வர வேண்டுமா என்பது போலிருந்தது அந்தச் சிரிப்பின் அர்த்தம். அதுவும் படித்த மனிதர்கள் தான் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அவர்களையே சட்டம் போட்டுத்தான் கட்டுப்படுத்த வேணுமா என்றமாதிரி இருந்தது அவருடைய அந்த மௌனச் சிரிப்பு.

எஸ்போஸ் பள்ளியில் நிறையத் தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறார். தண்டனைக்குள்ளாகியிருக்கிறார். வீட்டிலும் வெளியிலும் கூட எஸ்போஸ் காயப்படுத்தப்பட்டேயிருந்திருக்கிறார். இயக்கத்தில், வேலை செய்த இடங்களில், நண்பர்களிடத்தில், இலக்கிய அமைப்புகளில், ஊடகங்களில் என. அந்த வடுக்கள் அவரின் ஆழ் மனதில் ஆறாத காயங்களாகப் பதியமாகியிருந்தன. இளவயதின் காயங்கள் எளிதில் ஆறிவிடுவதில்லை. அவற்றை எளிதில் மறக்கக் கூடிய மனமும் எஸ்போஸிற்கிருக்கவில்லை. அதை அவர் உருவாக்கிக் கொள்ளவுமில்லை. "கடினமாக இருந்தாலும் சிலவற்றை நீ மறந்தே தீர வேணும். இல்லையென்றால், பகையும் பழியுணர்ச்சியும் கோபமும் உன்னை அலைக்கழிக்கும். உன்னைப் பற்றிய தேவையற்ற முன் அனுமானங்களால் நீ தடைப்படவும் கட்டுப்படுத்தப் படவும் திசைதிருப்பப்படவும் பதற்றமடையவும் கூடும். இது யதார்த்தம். எனவே இதை மாற்றிக் கொள்ளுவதற்குப் பயில்" என்று பல தடவை வலியுறுத்தியிருக்கிறேன். அதையெல்லாம் ஒரு போதுமே எஸ்போஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைப் பொறுத்த வரையில், மனிதர்கள் பெரும்பாலும் சுயநலமிகளாகவும் அதிகார வெறியுடையோராகவுமே இருக்கிறார்கள். நம்பிக்கை அளிப்பதற்குப் பதிலாக நம்பிக்கையைச் சிதைப்பதிலேயே ஒவ்வொருவரும் குறியாக உள்ளனர் என்ற எண்ணமே அவரிடம் ஆழ வேரோடியிருந்தது. ஆனால் இவையெல்லாவற்றையும் கடந்து, எல்லோரையும் மிஞ்ச வேண்டும் என்ற அசாத்தியமான திறமைகள் அவரிடம்

வளர்ந்திருந்தன. அது பள்ளிகள் காணாத ஆற்றல். நம்முடைய எந்தப்பள்ளியும் கண்டடைய முடியாத உருவாக்க முடியாத திறன். அந்தத் திறன் எஸ்போஸை இன்னொரு தளத்தில் பலப்படுத்தி வளர்த்தது. என்றபோதும் அவரில் நிலைகொண்டிருந்த ஒழுங்கின்மை அவற்றைச் செயலாக்குவதில் தடையாக இருந்தது. இதே வேளை எஸ்போஸைக் கணக்கில் கொள்ளத் தவறிய, புரிந்து கொள்ள முடியாதவர்கள் "உருப்படாதவன்" என்ற அபிப்பிராயம் கொண்டவர்கள் எப்பொழுதும் தவறான கணிதத்தோடுதான் அவரை அணுகினர். அதனாலென்ன, பலராலும் கவனங் கொள்ளாமல் விடப்பட்ட அவருடைய படைப்புகளில் கூர்மையும் தீவிரமும் கூடிய ஆழமிருந்தது. நவீனமிருந்தது. எதையும் புதிதாகக் காண வேணும், உருவாக்க வேணும் என்ற இடையறாத தாகமும் பயணமுமிருந்தது.

எஸ்போஸ் தன்னுடைய இளையவயதிற்குள் அதிகமாக வாசித்தார். காஃகாவும் காம்யுவும் ஆரம்பத்தில் அவருக்குப் பிடித்திருந்தனர். பிறகு அவர் பின்நவீனத்துவ எழுத்துகளில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கி, மார்க்வெஸ், போர்ஹே போன்றோரின் எழுத்துகளை அதிகம் விரும்பிப்படித்தார்.

தமிழில் அவருக்குப்பிடித்த படைப்பாளிகள் ஜி.நாகராஜன், சாருநிவேதிதா, கோணங்கி, விக்ரமாதித்யன், ஜெயமோகன், சல்மா, மனுஷ்யபுத்திரன், பிரேம் ரமேஸ் போன்ற சிலர். பிரமிளை அவர் அதிகம் நேசித்தார். பிரமிளின்மீது ஒருவகையான பித்துநிலை எஸ்போஸுக்கிருந்தது. இவர்களின் எழுத்துகளை அவர் அதிகமாகத் தேடி விரும்பிப்படித்தார். ஈழத்தில் திசேரா, ரஞ்சகுமார், உமா வரதராஜன், அனார், பா.அகிலன், நிலாந்தன், சோலைக்கிளி, சு.வி ஆகியோரின் எழுத்துகளில் அவருக்கு ஈடுபாடிருந்தது.

என்றாலும் எஸ்போஸ் பின் நவீனத்துவ எழுத்துகளையே தேடிக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய தேடலுக்கேற்ற மாதிரி வன்னியில் அவருக்கான புத்தகங்கள் அன்று இருக்கவில்லை. ஆங்கிலத்திலான புத்தகங்களை வாசிப்பதற்கு அவரால் முடியாது. என்றாலும் சில கட்டுரைகளையும் கதைகளையும் வேறு ஆட்களின்

மூலமாக மொழிபெயர்த்துப் படிப்பார். எஸ்போஸின் தெரிவுகள் பெரும்பாலும் மொழிபெயர்ப்புப்புத்தகங்களாவே இருக்கும். இப்படித்தான் எம்.ஜி. சுரேஷின் புத்தகங்களை எப்படியோ எங்கோ கண்டு வாங்கிக்கொண்டு ஒருநாள் திடீரென வந்தார். இரண்டு நாட்கள் வீட்டில் தங்கி நின்று இரவு பகலாக வாசித்தார்.

வாசித்து ஓயும் பொழுதுகளில் பேசத்தொடங்குவார். பேச்சு ஏதோ ஓர் புள்ளியில் விவாதமாகும். விவாதம் உச்சநிலைக்குப் போகும் போது, தான் மீண்டும் புத்தகத்தை வாசிக்கப்போவதாகக் கூறிச் சென்று விடுவார்.

மூன்றாவது நாள். நான்கு மணித்தியாலத்துக்கு மேல் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். தேடிவந்த நண்பர்கள் திரண்டிருக்க முழு உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவர் பேசிக்கொண்டிருந்த காட்சி ஒரு அழியாத சித்திரம்.

தன்னுடைய அரைவாசிக்கு மேற்பட்ட கவிதைகளை எஸ்போஸ் இந்தக்கலவையில், இந்தப்பண்பில்தான்- பின்நவீனத்துவத்தை எட்டவேண்டும் என்ற விருப்பில் எழுதினார். "செம்மணி" என்ற கவிதைத் தொகுதியில் இப்படி ஒரு கவிதையைத் தொடக்கத்தில் எழுதினார். பிறகு "சரிநிகரில்" இவ்வாறு சில கவிதைகள் வந்ததாக ஞாபகமுண்டு.

எஸ்போஸின் படைப்புலகம் தீவிர நிலையிலானதென்று சொன்னேனல்லவா. அதைவிடத்தீவிரமானது அவருடைய உரையாடல். சண்டையிடுவது போலவேதான் பேசுவார். அதிகம் உணர்ச்சி வசப்பட்டு விடுவார். அவருடைய அந்தக் கீச்சுக்குரல் அவருடைய சக்தியை மீறியொலிக்கும். உடல் வியர்த்துக் கைகள் நடுங்கும். புதியவர்களுக்கு கலவரமூட்டும் படியாக அந்த நிலை தோன்றும். நான் அந்தக் கணங்களில் அவரை ஆழமாக உணர்ந்திருக்கிறேன்.

நிச்சயமாக, அவருடன் பேசிக்கொண்டிருந்த பல நாட்களில் அவருடைய கைகள் நடுங்குவதைப் பார்த்திருக்கிறேன். ஆகலும் அவர் தீவிர உணர்ச்சிவசப்படுகின்றபோது தலைகவிழ்ந்து

அமைதியாகிவிடுவார். முகம் இறுகி உறைந்து விடும். ஆனாலும் ஒரு அரை மணித்தியாலம் அல்லது பத்து பதினைந்து நிமிடத்தின் பிறகு மீண்டும் சட்டென விவாதத்தை ஆரம்பித்து விடுவார். அத்தனை கொதிப்போடு சொற்கள் பிறக்கும். பேசவேண்டும், விவாதிக்க வேண்டும், அதனூடாக பல விசயங்களைப்பகிர வேண் டும், செயற்பாடுகளைத் தூண்டவேண்டும், அவற்றை வழிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவரிட முண்டு. அதுவும் எப்பொழுதும் எதிர்நிலையில் நின்றே விவாதிக்கும் ஒரு வகைப் போக்குடையவர்.

"நீர் முன்பொருதடவை பேசும்போது வேறு விதமாக அல்லவா இந்த விசயத்தைச் சொன்னீர். இப்ப அதுக்கு நேரெதிராகக் கதைக்கி றீரே" என்றால்,"அதை யார் மறுத்தது. எல்லாச் சந்தர்ப்பத்திலும் நாம் ஒரே மாதிரித்தான் இருக்க வேணுமா, அப்படி எதிர்பார்ப்பது ஒரு வகை அதிகாரமே" என்பார். "இப்போது இதுதான் - இப்படித் தான் என்னுடைய வாதம் இருக்கும்" என்று சொல்வார். நான் பொய் சொல்லவில்லையே. அதற்கு அவசியமுமில்லை. எனக்கு எதுவும் பொருட்டில்லை என்பதால் ஒன்றையே திரும்பிச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு கணமும் புதியது என்பதால் என் எண்ணங்களும் அப்படிப் புதியவையாகவே இருக்கும் என்பார்.

ஆனால் தான் அப்படிச் சொல்வதால் எதிரே அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர் என்ன வகையான புரிதலுக்கும் குழப்பத்துக்கும் ஆளாகுவார் என்பதையிட்டு வருத்தமோ, தயக்கமோ சற்றும் அவருக்கிருக்காது.

சார்பாக நின்று பேசுவதை விடவும், எதிர் நிலையில் நின்று விவாதிப்பதன் மூலம் பல விசயங்களை வெளியே கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. அதற்காக அவர் மற்றவர் களைச் சீண்டிக்கொண்டேயிருப்பார். இதனால் அவர் பலருடன் மோத வேண்டியிருந்தது. பலர் எஸ்போஸை விட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால் கடுமையாக மோதிக்கொண்டு வெளி யேறிப்போன அவர் பிறகொரு நாள் எதிர்பாராத சந்தர்ப்பத்தில்

சண்டையிட்டவரின் முன்னால் வந்து நிற்பார். எனவே அவருடன் யாரும் நிரந்தரமாகப் பகைக்க முடியாது. கோபத்தையும் அவரே உருவாக்குவார், பிறகு அதை அவரே துடைத்தழிப்பார். இதனால் அவருடன் பலர் கோவித்துக் கொண்டார்களே தவிர பகைக்க முடிய வில்லை.

அவருடன் இனிமேல் விவாதிப்பதில்லை என்று நீங்கள் தீர்மான மெடுக்கமுடியாது. நீங்கள் மிகப்பிடிவாதமாக உங்களுடைய தீர்மானத்தில் நிற்கலாம். ஆனால், எதிர்பாராத ஒரு புள்ளியில் வைத்து உங்களை அவர் விவாதத்தில் இழுத்து உங்கள் தீர்மானங் களையே குலைத்தழித்து விடுவார். மனதில் பகைமையோ தீமையோ இல்லை என்பதால் அவரை நிரந்தரமாக யாரும் நிராகரித் ததில்லை.

எஸ்போஸின் எழுத்துகளில் மிகத்தீவிரமானவை அவருடைய கவிதைகளே. அவை புதியவை. நவீன தமிழ்க்கவிதை வெளிப் பாட்டில் எஸ்போஸ் அளவுக்கு மொழியையும் சொல்முறையையும் பொருளையும் இணைத்து நேர்த்தியாக அரசியற் கவிதையை எழுதியவர்கள் குறைவு. அவருடைய கவிதைகள் மிகக்கவர்ச்சி யானவை. வாழ்வின் நேரடியான நெருக்கடிகள் சார்ந்தவை. அதன்வழியே மிக ஆழமானவை: மிக நேர்த்தியானவை. இரத்த சாட்சியமானவை. அதிகாரத்துக்கு எதிரான குரலை மிகத் தீவிரமாக ஒலித்த கவிதைகள். பெரும்பாலும் அரசியற்கவிதைகள்தான். உறவைக்குறித்த, காதலைக் குறித்த கவிதைகளும் ஒன்றிரண்டு உண்டு. ஆனால், எந்தக் கவிதையும் தன்னுடைய தீவிரத்தை இழந்த தில்லை. அவருடைய கலையே உணர்ச்சிகரமான தீவிரம்தான். இதனால் அவர் பலதையும் மிக ஆழமாக உள்ளுணர்ந்திருந்தார். தன்னுடைய மரணத்தைக் கூட முன்னுணர்ந்து எழுதிய கவி அவர். ஆனால், அப்படி மரணத்தை முன்னுணர்ந்து கவிதை எழுதியவர், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எந்த ஏற்பாட்டை யும் செய்யவில்லை. அதில் அவருக்கு அக்கறையும் மாற்றுத்திட்ட மிடல்களும் இருக்கவில்லை. எதேச்சையானதே வாழ்க்கை. அது ஒரு போதும் திட்டமிடல்களுக்குள் சிக்கக் கூடாது என்ற எண்ணத்தோடிருந்தவர்.

மொழியை அதன் உச்சமான சாத்தியப்பாடுகளில்வைத்து படைப் புக்குப்பயன்படுத்த முனைந்தவர் எஸ்போஸ். அவர் கவிதையை உணர்முறைக்குரிய படைப்பென்றே கருதினார். கதை கூறுவதைப் போன்ற சொல்முறையிலான கவிதையை அவர் முற்றாக நிராகரித்தார். என்னுடைய கவிதைகளைக் குறித்து அவருடைய விமர்சனங்கள் இந்த வகையிலானதாக இருந்தன. என்னுடைய முதலாவது கவிதைத் தொகுதி "ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்" வந்தபோது அதைக்குறித்து அத்தகையதொரு விமர்சனத்தை சரிநிகரில் எழுதியிருந்தார் எஸ்போஸ்.

"புதிய கவிதையை நாம் வீரியமாகவும் புதுமையாகவும் எழுதுவோம். அதன்மூலம் அதற்கான வெளியை உருவாக்க முடியும்" எனச் சொன்னபோது அவர் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்த மென் வழிமுறையை அவர் பின்பற்றத்தயாராக இருக்கவில்லை. கவிதைப் போலிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்க முடியாது. இன்று ஊடங்கள் கவிதைப்போலிகளையே உற்பத்தி யாக்குகின்றன. இதை அனுமதிக்க மாட்டேன். போலிகளால் உருவாக்கப்படும் ஒரு சமூகத்துடன் என்னால் ஒத்திசைந்து வாழ முடியாது". என்றெல்லாம் சொல்லி உரையாடல் எங்கெல்லாமோ செல்லும். இதனால் அவர் பலருடனும் ஓய்வில்லாமல் சண்டை யிட்டுக்கொண்டிருந்தார். சொல்முறையிலான கவிதையை நிரா கரிக்கும் நோக்கம் அவருக்குள் அந்தளவுக்கு ஆழமாக வேரோடி யிருந்தது.

சொல்முறையிலான கவிதை வாசகனை அதிகம் பலவீனப்படுத்து கிறது. அதில் ஜாலங்களே அதிகம். மொழியின் அலங்காரங்களை நம்பியே அது கட்டியெழுப்பப்படுகிறது. ஒற்றைப்படைத்தன்மை யும் சீரழிவும் அதற்குள் தாராளமாக நிரம்பிக்கிடக்கின்றன என்ற எண்ணங்கள் சொல்முறையிலான கவிதை குறித்து அவரிடம் இருந்தன. தீவிரத்தன்மையை நோக்கி வாசகரை அழைத்துச் செல்லும் வலிமை சொல்முறைக் கவிதைக்கில்லை. அதனால் அவை வாசகருக்கெதிரான அதிகார மையத்தைக் கொண்டிருக்கின்றன என்று வாதிட்டார். சொல்லல் கேட்டல், சொல்லல் ஏற்றுக்கொள்ளல் முறையில் ஒருவகை அதிகாரம் இருக்கிறது என்று

நாம் பேசியதை வைத்துக்கொண்டு தன்னுடைய இந்தத்தீவிர நிலைப்பாட்டைக் கட்டியெழுப்பியிருந்தார்.

உணர் முறைக் கவிதைகளில் அதிகம் வாசகன் மதிக்கப்படுகிறான். வாசகனுடைய அறிவை விரிவாக்கம் செய்யும் ஆழமான நம்பிக்கையைக்கொண்டே அந்தக்கவிதை உருவாகிறது. பன்முக வெளிகளில் வாசகன் பயணம் செய்யக்கூடிய சுதந்திரமும் வழிகளும் அந்தக்கவிதைகளில் நிரம்பக்கிடைக்கின்றன. உணர்தலினூடாக நிர்மாணிக்கப்படும் பேருலகத்தை, பகிரும் வழிமுறையை ஏன் யாரும் புறக்கணிக்க வேண்டும் என்று வாதிட்டார். இதனால் அவர் பலருடனும் நேரடியாக மோதவேண்டியேற்பட்டது. ஆனால் அவருக்கு அதையிட்ட வருத்தமெல்லாம் கிடையாது. அப்படி யொரு தளர்வான வெளியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியான வெளியிருந்தால் புதிய கவிதைக்கான இடத்தை அது மறைத்து விடும் என்று நம்பினார்.

அவருடைய கவிதைகளின் ஆற்றல் அவர் வலியுறுத்திய நிலைப் பாட்டைப் பிரதிபலித்தன. மிகக்குறைந்தளவு கவிதைகளையே எஸ்போஸ் எழுதியிருந்தாலும் அவருடைய கவிதைகள் பரந்தளவி லான கவனிப்பைப் பெற்றிருக்கின்றன. தொண்ணூறுகளில் எழுத வந்த படைப்பாளிகளிடத்தில் எஸ்போஸ் முதல் ஆளாகத் தன்னுடைய படைப்புகளின் வழியாக அடையாளம் காணப்படு கிறார். அதிலும் அவருடைய கவிதைகள் முன்னெப்பொழுதும் கிடைத்திராத புதிய அனுபவப் பிராந்தியத்தை விரிப்பதால் வாசகரிடத்தில் அவற்றுக்குத்தனி மதிப்புண்டாகி விட்டது.

அவருடைய கவிதைகளை பா.அகிலன், அ.யேசுராசா, சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், றஷ்மி, புதுவை இரத்தினதுரை, சித்தாந்தன், தானா. விஷ்ணு, நிலாந்தன்,அனார், எம்.பௌசர், சு.வி, போன்றோர் புதிய போக்கொன்றின் அடையாளமாகக் கண்டார்கள். இன்னும் பலர் அவ்வாறு கணடிருக்கக்கூடும்.

இதுவரையும் எழுதிய கவிதைகளை தொகுதியாக்கலாமே என்று கேட்டேன். “அவசியமில்லை. பார்க்கலாம்” என்றார் எஸ்போஸ்.

ஆனால் இறுதிவரையில் அவருடைய தொகுதிவரவேயில்லை. அவருடைய கவிதைகள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி அவை வராதது பெருந்துக்கமே. அவர் இதுவரையில் எழுதிய கவிதைகள் நூறுக்குள்தான் இருக்கும் எனத்தெரிகிறது. இவற்றை எப்படி ஒன்று சேர்ப்பது என்பது இன்றைய நிலையில் பெருங் கேள்வியே.

"நிலம்" இதழ் புதிய கவிதைக்கான தளத்தை நிர்மாணிக்கவேண்டும் என்றே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது எதிர்பார்த்தவாறு வரவில்லை. அதில் பெருந்துக்கமும் சலிப்புமடைந்திருந்தார் எஸ்போஸ். அது அவருடைய திட்டத்தையும் எதிர்பார்ப்பையும் கடந்து, சாதாரண இதழாகவே வந்தது. யேசுராசா இளங்கவிஞர் களுக்காக நடத்திய "கவிதை" இதழையும் விட நிலம் மேலெழும்ப வில்லையே என்று சில நண்பர்கள் அவரிடம் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்வியை அவர் மதித்திருக்கிறார். அதற்குப்பிறகுதான் அவர் "உயிர்நிழல் " என்ற பெயரில் புதிய இதழைப்பற்றி யோசித்தது.

அதிகாரத்துக்கெதிரான சிந்தனைதான் எஸ்போஸின் அடையாளம். எந்தப் போராட்டமும் தன்னை ஒடுக்கும் அதிகாரத்துக்கு எதிரானதுதான். சாதியோ, நிறமோ, வர்க்கமோ, மதமோ எதுவாயி னும். கைது, சித்திரவதை, கொலை, சிறை எல்லாமே அதிகாரத் தரப்புக் கொள்ளும் அச்சத்தின் வெளிப்பாடுகள்தான். எஸ்போஸின் எழுத்துகளின் ஆதாரம் இந்த மையத்தில் இருந்துதான் வேர்கொண் டெழுகிறது.

ஒருதடவை கைதியின் நிலை பற்றிப்பேசிக்கொண்டிருந்தோம். ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு கைது, சிறை, சித்திரவதை அனுபவங்கள் நிறையவுண்டு. அப்போது எங்களுடன் மயன்2 என்ற சு.மகேந்திரனும் இருந்தார். மகேந்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைக்குப் போய்க் கொண்டிருந்த போது வெலிக்கந்தவில் வைத்துப்படையினரால் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் இரண்டரை வருசங்கள் சிறையிருந்தவர். இன்றுவரையில் அவர் கைது செய்யப்பட்டதற்

கான காரணம் என்னவென்று அவருக்குத் தெரியாது. கைதுக்கான காரணத்தை அவரைப்பிடித்தவர்களும் சொல்லவில்லை. இவ்வளவுக்கும் அவர் ஒரு ஆசிரியர். இலங்கை இந்திய ஒப்பந்தம் வரவில்லையென்றால் தான் மேலும் நீண்டகாலம் சிறையிலேதான் இருந்திருக்க வேண்டுமோ என்று கேட்டார் மகேந்திரன்.

அன்று கைது, தண்டனை, சிறை, படுகொலை பற்றியே அதிகமும் பேசினோம். ஒரு கட்டத்தில் கைது செய்யப்படுவோனிடமா அல்லது கைது செய்வோனிடமா அதிகாரமிருக்கிறது என்ற கேள்வி பிறந்தது. இது நடந்து ஆறு அல்லது ஏழுமாதத்துக்குப் பிறகு "சித்திரவதைக்குப் பின்னான வாக்குமூலம்" என்ற கவிதையை எஸ்போஸ் மிகத்தரமாக எழுதியிருந்தார். அது சரிநிகரில் பிறகு வெளிவந்தது.

விவாதிப்பவற்றை, உரையாடலை படைப்பாக்குவதில் அசாதாரண திறமை எஸ்போஸுக்கு உண்டு. எங்களுக்கிடையே நிகழ்ந்த பல விவாதங்களையும் பேச்சுகளையும் அவர் நல்லமுறையில் பலவிதமாக எழுதியிருக்கிறார்.

எஸ்போஸின் படைப்பியக்கம் ஒடுக்குமுறைக்கெதிரானது. அதன் வழியான அதிகாரத்துக்கு எதிரானது. அவர் சமரசங்களுக்கும் விட்டுக்கொடுப்புகளுக்கும் இடமளியாமல் தன்னை வைத்துக் கொண்டார். அதனால் அவர் துருத்திக்கொண்டிருப்பதாகவே பலருக்கும் தெரிந்தார். அதனால்தான் அதிகாரத்துக்கு எதிரான படைப்பியக்கத்தில் அவரால் தீவிரமாகவும் ஆழமாகவும் ஈடுபடமுடிந்தது. இந்தமையத்தைச்சுற்றியே அவர் தொடர்ந்து தன்னுடைய படைப்பியக்கத்தையும் உருவாக்கியிருந்தார்.

எஸ்போஸுக்குத்தெரியும், தான் என்றோ ஒரு நாள் கைது செய்யப் படுவேன், சித்திரவதைக்குள்ளாவேன் அல்லது சுட்டுக் கொல்லப்படுவேன் என்று. அவர் அதைப்பற்றி முன்னுணர்ந்து எழுதியிருக்கிறார். "விலங்கிடப்பட இருந்த நாளொன்றில் எழுதிய அஞ்சலிக்குறிப்பு" "சிலுவைச்சரித்திரம்" என்ற கவிதைகள் உட்பட பல கவிதைகள் இவ்வாறுள்ளன.

"சிறகுகள், குருதியொழுகும் சிறகுகள்
ஆணிகள், குருதியொழுகும் ஆணிகள் "

"எனது அடையாளம்
நான் யாரைக்குறித்து இருக்கிறேன் என்பது "

" அதிகாரத்தைச் சிலுவையிலறைவதா
அதிகாரத்திற்கெதிரான நமது இருதயங்களைச்
சிலுவையிலறைவதா "

எஸ்போஸ் விடுதலைக்காப் போராடுவோரைக் குறித்திருந்தார். அதுதான் அவருடைய அடையாளம். அந்த வாழ்வின்போதுதான் அவர் சிலுவையிலறையப்பட்டார். அவர் முன்னரே எழுதி யிருந்ததைப்போல, தனக்கான சிலுவை காத்திருக்கிறது என்று அவர் நம்பியதைப்போல அவருக்குச் சிலுவை பரிசளிக்கப்பட்டிருக் கிறது. கிறிஸ்துவையும் விட இளைய வயதில் அவர் சிலுவை யேற்றப்பட்டார்.

எஸ்போஸ் இளமையிலே தன்னுடைய தந்தையை இழந்ததைப் போல அவருடைய பிள்ளைகளும் இளமையிலேயே தங்களின் தந்தையை இழந்திருக்கிறார்கள். அவருடைய தாய் தன்னுடைய துணையை இழந்ததைப்போல அவருடைய மனைவி தன் துணையை இழந்திருக்கிறார். நாங்கள் மகத்தானதொரு கவிஞனை இழந்திருக்கிறோம். அபூர்வமானதொரு மனிதனை இழந்திருக்கி றோம். நல்லதொரு தோழனை இழந்திருக்கிறோம்.

அவர் எழுதினார்,
" உன்னை அவர்கள் கொல்வார்கள்
நிச்சயமாக நீயே அதை உணர்வாய்
அப்பரிசு
நிச்சயமற்ற உனது காலத்தில்
எப்போதாவது உனக்குக் கிடைக்கத்தான் போகிறது. "

இதுதான் நடந்தது. அவர் எதைச் சொன்னாரோ அதுவே நடந்தது.

அன்றிரவு ஒரு மெல்லிய மனிதனைக்கொல்வதற்காக, ஒரு மெலிந்து ஒடுங்கிய கவிஞனைக் கொல்வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் அவனுடைய வீட்டைத்தேடிப்போனார்கள். ஒரு நிராயுதபாணியைக் கொல்வதற்காக துப்பாக்கிகளைக்கொண்டு போனார்கள்.

எஸ்போஸ் ஒரு கவிதையில் ஏற்கனவே முன்னுணர்ந்து எழுதியதைப்போல "நீ துப்பாக்கியை இழுத்துக் கொண்டு வருகிறாய்" என அவர்கள் அந்த ஒட்டி உலர்ந்த மனிதனிடம் போனார்கள். அவனுடைய குழந்தையின் முன்னாலேயே அந்த மனிதனைப் பலியிட்டார்கள். அக்கணம் அங்கே, அந்தக் குழந்தையின் முன்னே, அந்த மனிதன் குருதிதெறிக்க புரண்டுகிடந் தான் அகாலமாக.

சிலுவையில் இன்னொரு மனிதன்.

ஜீசஸ், உம்மைப்போல மெலிந்த மனிதன். உம்மைப்போலவே தாடிவைத்திருந்த மனிதன். உம்மைப்போலவே சனங்களைப்பற்றிச் சிந்தித்த மனிதன். உம்மைப்போலவே காப்பாற்றுவதற்கு யாருமற்ற மனிதன். உம்மைப்போலவே பசியோடிருந்த மனிதன். உம்மைப்போலவே, அதிகாரம் பலியெடுத்த மனிதன்...

அந்த இரவில் அவர்கள் அந்த மனிதனைச் சுட்டுக்கொன்றார்கள். ஆமாம், அந்த மனிதனை மட்டும்தான் அவர்கள் சுட்டுக் கொன்றார்கள். அவனையல்ல. அவனுடைய வரலாற்றை அல்ல. அவனைப் பற்றிய எங்கள் நினைவுகளையுமல்ல.
00

---

இக்கட்டுரை சந்திரபோஸ் சுதாகர் நினைவாக சரிநிகர் இதழ்-02, மே-யூன் 2007 இல் வெளிவந்தது.

நன்றி- சரிநிகர்

## புத்தகம் மீதான எனது வாழ்வு

கொஞ்சம் புத்தகங்களோடு தொடங்கியது வாழ்க்கை
புத்தகங்களின் சொற்களில் சோறு இல்லை என்பதே
பிரச்சினையாயிற்று வாழ்க்கை முழுக்க,
யாரும் நம்பவில்லை தமது வாழ்க்கை
புத்தகங்களோடுதான் தொடங்கியதென்பதை
அவர்களே அப்படி நம்ப
யாரையும் அனுமதிக்கவில்லை.

புத்தகங்களில் சோறு இல்லை
புத்தகங்களில் துணி இல்லை
அணிவதற்கு தங்க ஆபரணங்கள் தானும் இல்லை
புத்தகங்களே பிரச்சினையாயிற்று வாழ்க்கை முழுக்க.

நான் புத்தகங்களோடு வாழ்கிறேன் என்பதையும்
புத்தகங்ளில் தூங்குகிறேன் என்பதனையும்
இதயம் சிதையும் துயரின் ஒலியை
புத்தகங்கள் தின்னுகின்றன என்பதனையும்
ஓ கடவுளே! யாரும் அதை நம்பவில்லை
என்னையும் அனுமதிக்கவில்லை

புறாக்கள் வாழ்ந்த கூரைகளில்
உதிர்ந்து கிடக்கின்றன வெண் சிறகுகள்.

# எஸ்போஸ்

## அவர்கள் அவனைச் சுட்டுக்கொன்றனர்

நவீன தமிழ்க்கவிதை வெளிப் பாட்டில் எஸ்போஸ் அளவுக்கு மொழியையும் சொல்முறையையும் பொருளையும் இணைத்து நேர்த்தியாக அரசியற் கவிதையை எழுதியவர்கள் குறைவு. அவருடைய கவிதைகள் மிகக்கவர்ச்சி யானவை. வாழ்வின் நேரடியான நெருக்கடிகள் சார்ந்தவை. அதன்வழியே மிக ஆழமானவை: மிக நேர்த்தியானவை. இரத்த சாட்சியமானவை. அதிகாரத்துக்கு எதிரான குரலை மிகத் தீவிரமாக ஒலித்த கவிதைகள். பெரும்பாலும் அரசியற்கவிதைகள்தான். உறவைக்குறித்த, காதலைக் குறித்த கவிதைகளும் ஒன்றிரண்டு உண்டு. ஆனால், எந்தக் கவிதையும் தன்னுடைய தீவிரத்தை இழந்த தில்லை. அவருடைய கலையே உணர்ச்சிகரமான தீவிரம்தான். இதனால் அவர் பலதையும் மிக ஆழமாக உள்ளுணர்ந்திருந்தார். தன்னுடைய மரணத்தைக் கூட முன்னுணர்ந்து எழுதிய கவி அவர். ஆனால், அப்படி மரணத்தை முன்னுணர்ந்து கவிதை எழுதியவர், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எந்த ஏற்பாட்டை யும் செய்யவில்லை.

கருணாகரன்

ஆகாயம் பதிப்பகம், இமையாணன். 021 205 5925